BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர்மன்றமானது புதிய சமத்துவ அலுவலகத்தை 2021 ஆம் ஆண்டில் துவக்கவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 18, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தனது சபைக்காலத்தில் முன்னுரிமையாக முடிக்கப்பட வேண்டியவற்றை முன்னெடுக்கிறது: தனது பணியாளர்கள் மற்றும் குடிமக்களுக்கு சேவையாற்றுவதற்காக ஒரு சமத்துவ அலுவலகம் கட்டுவதற்கான அடித்தளம் அமைப்பதன் மூலம் ப்ராம்ப்ட்டன் பன்முக நகரமாகிறது. டிசம்பர் 9 ஆம் தேதியன்று நகர்மன்றம் இந்த முனைப்புக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது; இது நகரின் பன்முகத்தன்மை & அனைத்தையும் உள்சேர்ப்பதற்கான செயல்திட்டத்தை (City's Diversity & Inclusion Workplan) முடுக்கிவிடும். கனேடிய பொதுத்துறை ஊழியர்களின் ஒன்றியம், லோக்கல் 831; அமால்கமேட்டட் ட்ரான்ஸிட் யூனியன் (Amalgamated Transit Union) லோக்கல் 1573 மற்றும் பிராம்ப்டன் நிபுணத்துவ தீயணைப்பு வீரர்கள் சங்கம், லோக்கல் 1068 ஆகியவற்றின் பாட்டாளிதொழிலாளர் அனைவரின் அர்ப்பணிப்புடன் கூடிய ஆதரவு பெறுவதில் நகர நிர்வாகம் மகிழ்ச்சியடைகிறது.

ப்ராம்ப்ட்டன் நகரத்தில் உள்ள சமத்துவ அலுவலகமானது, இனம், வம்சாவளி, பிறந்த இடம், நிறம், இன மூலாதாரம், இயலாமை, குடியுரிமை, மதம், பாலினம், பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், ஒரே பாலின கூட்டு வைத்தல், வயது, திருமண நிலை, குடும்ப நிலை, புலம்பெயர்ந்த நிலை, பொது உதவி பெறும் நிலை, அரசியல் தொடர்பு, மத தொடர்பு, கல்வியறிவின் நிலை, மொழி மற்றும் / அல்லது சமூக-பொருளாதார நிலை ஆகியவை ஒரு பொருட்டில்லாமல், பணியிடம் மற்றும் சமுதாயத்திற்குள்ளாக இருக்கக்கூடிய தடைகளைக் கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்கு கவனம் செலுத்தும்.

ஏற்கெனவே இருக்கின்ற முக்கியமான முயற்சிகளுக்கு இடையில், இந்த ஆண்டு அமைக்கப்பட்ட கறுப்பின ஆப்பிரிக்கர் மற்றும் கரீபிய மக்களுக்கு சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார வலுவூட்டல் அமைப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு ஆகியவற்றுக்கும், இது அனுசரணை வழங்கும்.

அனைத்து நபர்களையும் நியாயமான மற்றும் சமமான முறையில் நடத்த உறுதி செய்வதற்கும், நகரத்திற்குள்ளும் மற்றும் அதன் குடியிருப்பாளர்களுக்கு இடையேயும் இணக்கமான சூழலை மேம்படுத்துவதற்கும் சமத்துவ அலுவலகம் செயல்படும்.

நவம்பர் 2019 இல், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பணியிட பன்முகத்தன்மை மற்றும் அனைத்தையும் உள் சேர்க்கின்ற, புதிய ஐந்தாண்டு உத்தி மற்றும் செயல் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தனது மக்களை

ஈடுபடுத்தி, மேம்படுத்தி அவர்களைக் கொண்டாடி, மற்றும் பலதரப்பட்ட பணியாளர்களை ஈர்க்கின்ற வகையில் அனைத்தையும் உள்ளடக்கிய ஒழுங்குமுறை சார்ந்த ஒரு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை இது அமைக்கிறது.

2019 ஆம் ஆண்டில், நகர் மன்றமானது பன்முகத்தன்மை மற்றும் உள்சேர்ப்புக்கான கனேடிய மையம் (CCDI) தலைமையிலான ஒரு பயிற்சிப்பட்டறையில் பங்கேற்றது; அந்தப் பயிற்சியின்போது, ஜனவரி முதல் மார்ச் 2019 வரை நடத்திய நகர ஊழியர்களின் கருத்தாய்வு பற்றிய அறிக்கையை வழங்கினர். CCDI பகுப்பாய்வானது, இலக்கு வைத்த குழுக்கள், தலைமைப்பண்பு பற்றிய மதிப்பீடுகள் மற்றும் நிறுவனத்தின் முதிர்ச்சிபெறும் பக்குவம் பற்றிய பகுப்பாய்வு ஆகியவற்றிலிருந்து பெற்ற ஆதாரங்களையும் உள் சேர்த்துக்கொண்டது.

இந்த யுக்தியில் நான்கு விஷயங்கள் முன்னுரிமை கொண்டவையாகும்:

- ப்ராம்ப்ட்டன் நகரம் சேவை அளிக்கின்ற சமூகத்தின் பிரதிபலிப்பாக இருக்கின்ற பலதரப்பட்ட பணியாளர்கள் கொண்ட பணிப்படையை வளர்த்தல்
- தனிநபர்களின் சொல், தங்கியிருக்கும் இடம், பாடுபடும் இடம் ஆகியவற்றில், அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சூழலை வளர்த்தல்
- பன்முகத்தன்மை மற்றும் செழித்து வளர்வதற்காக, அனைத்து ஊழியர்களுக்கும் விழிப்புணர்வு மற்றும் திறனை வளர்த்தல்
- நகரம் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, ஒருமைப்பாடு, தைரியம் மற்றும் இரக்கத்தின் மீதான மதிப்புக்களை உயர்த்திப் பிடிப்பதன் மூலம், நமது தனித்துவத்தையும் பகிரப்பட்ட வெற்றிகளையும் கொண்டாடுதல்

ஜூன் 2020 இல், நகர் மன்றமானது கறுப்பர் மீதான இனவெறிக்கு எதிராக அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்க நகரத்தின் முதலாவது கறுப்பர் இன ஆப்பிரிக்க மற்றும் கரீபிய மக்களுக்கு சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிக்கும் அமைப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.

ப்ராம்ப்ட்டன் நகரின் பலதரப்பட்ட ஆப்பிரிக்க கறுப்பர் இனம் மற்றும் கரீபியன் புலம்பெயர்ந்தோரால் வழிநடத்தப்படும் இந்த பிரிவு, முன்னுரிமை பெறவேண்டிய விஷயங்களையும் ப்ராம்ப்ட்டன் நகரில் அமைப்பு ரீதியான கறுப்பர் இனம் மீதான நிறவெறி எதிர்ப்பினையும் நிலைநாட்டும்; மேலும் இவற்றுக்கான செயல்திட்டத்தையும், மற்றும் கறுப்பின சமூகத்தின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துகின்ற ஒரு செயல் திட்டத்தையும் நிறுவும்.

நவம்பர் 2020 இல், இந்நகரம் ஐந்து இலாப நோக்கம் கொண்டிராத சப்ளையர் சான்றிதழ் அமைப்புகளின் புதிய கார்ப்பரேட் உறுப்பினர் ஆனது: பை சோஷியல் கனடா (Buy Social Canada); கனேடிய பழங்குடி மற்றும் சிறுபான்மை சப்ளையர் கவுன்சில் (Canadian Aboriginal and Minority Supplier Council); கனடியன் கே மற்றும் லெஸ்பியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் (Canadian Gay and Lesbian Chamber of

Commerce); இன்க்ளூசிவ் வொர்க்ப்ளேஸ் சப்ளை கவுன்சில் ஆஃப் கனடா அண்ட் WBE கனடா (Inclusive Workplace Supply Council of Canada and WBE Canada); இவையனைத்தும் பெண்கள், பழங்குடியின மக்கள், கண்ணுக்கு புலப்படும் சிறுபான்மையினர், போர்வீரர்கள், குறைபாடுகள் உள்ளவர்கள், LGBTQ2S- க்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் சமூக நோக்கம் கொண்ட நிறுவனங்கள் (இவை அனைத்தும் உட்பட்டு, ஆனால் இவை மட்டுமே அல்லாத அமைப்புக்கள்) ஆகியோர் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களை சமத்துவமான முறையிலான அணுகலை உண்டாக்குவதற்காகவேயாகும்; இவர்கள் நகரின் கொள்முதல் திட்டங்களில் ஏலம் எடுக்கவும், ப்ராம்ப்ட்டனில் அதிக வணிகம் செய்யவும் வழி பிறக்கும்.

சமத்துவ அலுவலகத்தை துவக்குவது பற்றிய மேற்கொண்டு விபரங்களை நகர நிர்வாகம் 2021 ஆம் ஆண்டு துவக்கத்தில் வெளியிடும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் ஒரு பன்முகம் கொண்ட நகரம்; மேலும் நகரத்தில் எங்கள் திட்டங்கள், சேவைகள் மற்றும் முன்னெடுப்புக்கள் அனைத்திலும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைத்தையும் உள்சேர்ப்பதை தொடர்ந்து உட்படுத்த நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். இந்தப் புதிய சமத்துவ அலுவலகமானது, நகரத்திலும் எங்கள் மாறுபட்ட சமூகத்திலும் உள்ள தடைகளை கண்டறிந்து, அவற்றை அகற்றுவதற்காக பணியாற்றும்; நமது குடியிருப்பாளர்கள் அனைவரும் நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த உதவும். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரமானது, நமது பலதரப்பட்ட சமூகத்திற்கு தடைகள் இல்லாமல் மிகவும் சமத்துவமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நகரத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. இந்த சமத்துவ அலுவலகமானது, அனைத்து நபர்களும் நியாயமாக சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதி செய்யும்; இது நகரின் பணியாளர்கள் மற்றும் அனைத்து ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கும் இணக்கமான சூழலை உறுதிப்படுத்த எங்களுக்கு உதவும். ”

*- ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர் வார்டுகள் 9&10, தலைமைப் பொறுப்பு, பெறுநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“2020 ஆம் ஆண்டு முழுவதுமாக, ஊழியர்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கான தடைகளை நீக்குவது, ஆப்பிரிக்க மற்றும் கரீபிய கறுப்பின சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பைத் தொடங்குவது குறித்து நகரம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது; மற்றும் சான்றளிக்கப்பட்ட பலதரப்பட்ட வணிகங்களுக்கு ப்ராம்ப்ட்டனில் அதிக வாய்ப்புகளை உருவாக்கவும் வேலை செய்கிறது. புதிய சமத்துவ அலுவலகம் மற்றொரு குறிப்பிடத்தக்க படியாகும்; நமது நகரத்தில் உள்ள அனைவரும் நியாயமாகவும் சமத்துவமாகவும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த இது உதவும்.

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1 & 5, துணைத்தலைமை பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரமானது நம்பமுடியாத அளவில் பன்முகம் கொண்ட சமுதாயமாகும்; மற்றும் கவுன்சிலின் வாழ்நாள் காலத்திற்குள் முன்னுரிமை தரவேண்டிய விஷயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊழியர்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர். புதிய சமத்துவ அலுவலகம் என்பது எங்கள் நகரத்தின் தற்போதைய வேலைகளில் ஒரு முக்கியமான அடுத்த கட்டமாகும், இது நமது மக்களை ஈடுபாடு கொள்ள வைக்கும், வளர்த்துவிடும் மற்றும் கொண்டாடும்; மற்றும் பலதரப்பட்ட பணியாளர்களை ஈர்க்கும்படியான, அனைவரையும் உள்ளடக்கிய கலாச்சாரத்தை வளர்க்கும். இந்த முக்கியமான இலக்கை நோக்கி ஒத்துழைப்பதில் நகரத்தின் பாட்டாளி தொழிலாளர்களின் ஆதரவுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். "

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரின் அமைப்புரீதியான கலாச்சாரம் என்பது நமது உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கியது என்பதை உறுதிப்படுத்த இந்த சமத்துவ அலுவலகம் செயல்படும். நகர நிர்வாகம் இதைத் தொடங்குவதற்கு நாங்கள் ஆதரவு தருகிறோம்; அது ஊழியர்களையும் குடியிருப்பாளர்களையும் ஊக்குவிக்கின்ற ஒரு சூழலை எதிர்நோக்குகிறோம். "

- கனடிய நாட்டு பொதுத்துறை பணியாளர்கள் சங்கம், லோக்கல் *831*

"அமால்மகேட்ட்ட் டிரான்ஸிட் யூனியன், லோக்கல் 1573 தனது அனைத்து உறுப்பினர்களையும் நியாயமாக மற்றும் சமத்துவமாக நடத்துவதை நம்புகிறது. நகர நிர்வாகம் சமத்துவ அலுவலகத்தைத் தொடங்கும் இந்த நேரத்தில், நாங்கள் அதை ஆதரிப்பதில் பெருமிதம் கொள்கிறோம், மேலும் இது அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பணியிடத்தை உருவாக்க அதன் பணிகளை செய்கிறது.

*- ஃப்ரான்க் வனி, தலைவர், அமால்கமேட்ட்ட் ட்ரான்ஸிட் யூனியன் (Amalgamated Transit Union), லோக்கல் 1573*

"நகர நிர்வாகத்தின் புதிய சமத்துவ அலுவலகமானது பணியிடத்தில் உள்ள தடைகளை அடையாளம் கண்டு, அவற்றை நீக்கி அனைவருக்கும் இணக்கமான சூழலை உருவாக்கும். ப்ராம்ப்ட்டன் நகர தொழில்முறை தீயணைப்புப்படை வீரர்கள், தீயணைப்புப்படை வீரர்களுக்கான சர்வதேச இணையம் மற்றும் லோக்கல் 1068 ஆகிய அமைப்புக்கள் இந்த அலுவலகத்தை நகரம் திறப்பதை ஆதரிக்கின்றனர். "

*- பால் லெகோம்ப்ட்டே, தலைவர், ப்ராம்ப்ட்டன் தொழில்முறை* தீயணைப்புப்படை வீரர்களுக்கான சர்வதேச இணையம் மற்றும் லோக்கல் 1068

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்